மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.224/2022

பெயர்-திரு.பெருமாள் நாள்.19.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-

1) 2-ம் பிரதிவாதி துரைசாமி எனது தம்பி ஆவார். வழக்கு சொத்து மலையாக்கவுண்டரின் மகளான அண்ணாமலைச்சிக்கு அவரது தந்தை தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததன் படி தாவா சொத்து எனது தாயார் அண்ணாமலைச்சிக்கு கிடைத்தது. மலையாக்கவுண்டர் தாவா சொத்தை வெள்ளையப்பன் மற்றும் சின்னநம்பி ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். மலையாக்கவுண்டர் தாவா சொத்தை கிரையம் வாங்கிய வருடம் எனக்கு தெரியாது. சுமார் 50 வருடம் இருக்கும். அண்ணாமலையச்சிக்கு தானசெட்டில்மெண்ட் எப்போது எழுதப்பட்டது என தெரியாது. சுமார் 30 வருடங்கள் இருக்கும். தானசெட்டில்மெண்ட் எழுதப்பட்ட சொத்தின் காலை எண்.1704 ஆகும். க.ச.எண்.1704-ன் பழைய காலை எண் எனக்கு தெரியாது. அண்ணாமலையச்சியின் செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.எண்.1704 என குறிப்பிட்டுதான் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். 50 வருடங்களாக க.ச.எண்.1704-ல் நானும், எனது குடும்பமும் அனுபவம் செய்து வருகிறோம். மேற்படி சொத்தில் எங்களது அனுபவத்தினை காட்ட கந்தாய ரசிது போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீரா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது தாயார் அண்ணாமலையச்சி அவருக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை எனக்கும், எனது சகோதரருக்கும் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளாரா என்றால், இல்லை.

2) வேறு ஏதேனும் சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளாரா என்றால், இல்லை. கடந்த 14.10.2009-ல் எனது தாயார் எனக்கும், துரைசாமிக்கும் இரண்டு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணங்களான 4284/2009, 4285/2009 என ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால், இல்லை. குத்தியாலத்தூர் கிராமம் ப.க.ச.எண்.322, பு.க.ச.எண்.1561/1ல் எனக்கு 1 ஏக்கர் பூமியும், 2 பிரதிவாதிக்கு 1 ஏக்கர் பூமியும் உள்ளதா என்றால், உள்ளது. மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சர்வே எண்ணை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அது எந்த காலை எண்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்,

க.ச.எண்.1704-ஐ பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது தாயார் அண்ணாமலையச்சிக்கு தானசெட்டில்மெண்ட் படி புல எண்.322-ல் தான் சொத்து கிடைத்தது என்றால், சரியல்ல. க.ச.எண்.1704-ன் பழைய காலை எண்.330 என்றால், அதுபற்றி தெரியாது. அதேபோல், புல எண்.322-க்கு புதிய க.ச.எண்.1561/1 என்றால், அதுபற்றி தெரியாது. எனது தாயார் தானசெட்டில்மெண்ட் மூலம் பெற்ற சொத்தும், மலையாக்கவுண்டர் கிரையம் பெற்ற சொத்தும், க.ச.எண்.322-ல் உள்ளது என்றாலும், அதன் பு.க.ச.எண்.1561/1 என்றாலும், சரியல்ல. எனக்கும் க.ச.எண்.1704 சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் பழைய க.ச.எண்.322-ல் அனுபவத்தில் உள்ளேனா அல்லது க.ச.எண்.330-ல் அனுபவத்தில் உள்ளேனா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. நான் பு.க.ச..எண்.1704-ல் தான் அனுபவத்தில் உள்ளேன். பு.க.ச.எண்.1704-ல் அனுபவத்தில் உள்ளதை காட்ட, ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மலையாக்கவுண்டர் 1975-ல் கிரையம் வாங்கிய நாள்முதல் இன்றுவரை தவறான காலை எண்ணை மாற்ற நான் முயற்சி செய்துள்ளேனா என்றால், வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், 4 வருடங்களுக்கு முன்பு வழக்கு தாக்கல் செய்தேன். 60 ஆண்டுகளுக்கு பிறகுதான் தாவா சொத்தின் காலை எண் தவறாக உள்ள விவரம் தெரிந்ததா என்றால், ஆமாம். தாவா சொத்தின் காலை எண் தவறாக உள்ளது என கிராம நிர்வாக அலுவலகத்தில் தெரிந்துகொண்டேன்.

3) எனக்கு குத்தியாலத்தூர் கிராமத்தில் 4 ஏக்கர் பூமி உள்ளது. அவை தனித்தனியான பூமிகளாக உள்ளது. க.ச.எண்.1704-ல் 2 1/2 ஏக்கரும், மீதி பூமி வேறு காலையில் உள்ளது. எனக்கு 28.04.1975 மூல ஆவணத்தின் படியும், 15.06.1994 எனது தாயாரின் தானசெட்டில்மெண்ட் படியும், க.ச.எண்.322-ல் தான் சொத்துக்கள் உள்ளது என்றாலும், அதன் பு.க.ச.எண்.1561 என்றாலும் சரியல்ல. எனக்கும் க.ச.எண்.1704 க்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன புல எண்.1561-ல் உள்ள சொத்தை எனது தாயார் எனக்கும், எனது சகோதரருக்கும் தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றாலும், அதில் க.ச.எண்.1561 தான் கண்டுள்ளது என்றாலும், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையிலும் அண்ணாமலையச்சி அவரது சொத்துக்களை எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டதாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது தாயார் அவரது சொத்துக்களை தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் ப.க.ச.எண்.330, பு.க.ச.எண்.1704-ல் எங்களுக்கு எவ்வித பாத்தியமோ, சுவாதினமோ கிடையாது என குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. க.ச.எண்.1704-ற்கான கந்தாய ரசீது, வரிகள், பட்டா, அடங்கல் வாதி தேவராஜ் பெயரில் உள்ளது என்றால், சரிதான்.

க.ச.எண்.1704-ல் எனது அனுபவத்தில் இருந்திருந்தால், நான் சொத்து வரி, வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்திருப்பேன் என்றாலும், எனவே மேற்படி சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. ப.க.ச.எண்.330, பு.க.ச.எண்.1704 வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றாலும், அவரை இடையூறு செய்வதால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சரியல்ல. புல எண் தவறாக இருந்திருந்தால் 60 ஆண்டுகளுக்கு முன்பே உரிய நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும், வேண்டுமென்றே தற்போது வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு சார்பு நீதிமன்றத்தில் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.19 15:30:24 +0530

District Munsif